# அக்மீமன பிரதேச சபை

# காலி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஆகஸ்ட் 07 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 25 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 அக்டோபர் 08 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அக்மீமன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

-------------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 20 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 7,213,928 தொகைக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை மற்றும் மீளாய்வாண்டின் போது அக் கொடுப்பனவினை மூலதன செலவுக் கணக்கிற்கு வரவு வைத்துள்ளமையால் திரண்ட நிதியம் மற்றும் மீளாய்வாண்டிற்கான மூலதன செலவுகள் ரூபா 7,213,928 வீதம் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 18 நிர்மாண வேலைகளுக்காக பெற வேண்டிய மூலதன உதவி ரூபா 10,011,119 தொகையொன்று நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி மற்றும் கடன்பட்டோர் ரூபா 10,011,119 தொகை வீதம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 29 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய மூலதன மூலதனச் செலவுகள் ரூபா 13,916,372 தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 13,916,372 தொகை வீதம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த புதிய பல்தொழிற்பாட்டு கட்டிடத்தின் பெறுமதி ரூபா 2,367,833 தொகை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 103,000 இற்கான தளபாடங்களும் பொருத்துக்களும் மற்றும் ரூபா 33,850 இற்கான பொறியும் பொறித்தொகுதியும் மற்றும் உபகரணங்கள் ஆக கூட்டுத்தொகை ரூபா 136,850 இற்கான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) ரூபா 1,147,800 இற்கான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்தல் நிதிக் கூற்றுக்களில் மீண்டுவரும் செலவுகள் என காட்டப்பட்டிருந்தன.

(எ) மீளாய்வாண்டிற்கான சபை அமர்வுப் படி ரூபா 1,198,750 தொகை எனினும், ரூபா 500,250 இற்கான மோட்டார் சைக்கிள் கடன் தவணைப் பணம் அறவிடப்பட்டவைகளை கழித்து ரூபா 698,500 தொகை மாத்திரம் சபை அமர்வுப் படி என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவு ரூபா 500,250 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகள் இடையே ரூபா 445,677 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 37,937,333 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள், நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், பட்டோலைகள், முறைப்படி பேணப்பட்ட கடன்கொடுத்தோர் பதிவேடு, மீதிகளை உறுதிப்படுத்தல்கள், காலப்பகுப்பாய்வும் முறையாக பேணப்பட்ட முற்பணப் பதிவேடுகள் போன்ற சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

(அ) வெளிநாட்டு கல்விச் சுற்றுலா

---

பிரதேச சபை நிதியத்தினை பயன்படுத்துவது பற்றிய சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 இல் காட்டப்பட்டுள்ள விடயங்களின் கீழ் காணப்படாத கருமம் ஒன்றான 02 வெளிநாட்டு கல்விச் சுற்றுலாகளுக்காக தலைவர், உப தலைவர் மற்றும் 12 அங்கத்தவர்களுக்கு ரூபா 1,270,855 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது. அதே போல் வெளிநாடு செல்வதற்காக முறையான அங்கீகாரம் ஒன்றினையும் பெற்றிருக்கவில்லை.

(ஆ) விழாச் செலவுகள்

------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132(ஓ) ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுவான முக்கியத்துவம் உடைய கருமங்கள் பற்றிய விழா செலவுகள் தொடர்பாக ஒரு வருடத்திற்கான மொத்தக் கூட்டுத்தொகை ரூபா ஒரு ஆயிரத்தை விஞ்சாத வகையில் காணப்பட வேண்டும். அத்துடன் அதனை மிகைக்கும் இடைத்து அதற்காக அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரத்தை எழுத்துமூலமாக பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும் அங்கீகாரத்தை பெற்றிருக்காமல் மூன்று விழாக்களுக்காக ரூபா 116,218 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது.

2. நிதி மீளாய்வு

-----------------------

2.1 நிதி விளைவு

-----------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 3,454,571 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,617,686 ஆகும்.

2.2 வங்கிக் கணக்குகள்

---------------------------------

(i) நிர்மாண வேலைகளுக்கான செலவுகள் மேற்கொள்வதற்கு தனியாக நடைமுறைக் கணக்கு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் ஒரே கணக்கின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ii) வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இனங்கண்டிருந்த ரூபா 7,952 பெறுமதியான பிழையை சீராக்கல் மேற்கொண்டு திருத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3 வருமான நிருவாகம்

---------------------------------

2.3.1 வீத வரி மற்றும் ஏக்கர் வரி

-----------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,881,981 இற்கான வீத வரி மற்றும் ரூபா 314,477 இற்கான ஏக்கர் வரி 1981 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.2 வாடகை

--------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 504,447 இற்கான வாடகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.3 அனுமதிப் பத்திரக் கட்டணம்

---

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 155,852 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

---

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 1,731,110 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 27,032,741 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---

1988 இன் 74 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினனால் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவைகளின் பிரகாரம் 2011 ஆண்டின் போது தலைர் மற்றும் மூன்று அங்கத்தவர்களினாலும் 2012 ஆண்டின் போது உப தலைவர் மற்றும் 08 அங்கத்தவர்கள், 2013 ஆண்டின் போது தலைவர், உப தலைவர் மற்றும் 11 அங்கத்தவர்களினாலும் 2014 ஆண்டின் போது தலைவர் உப தலைவர் உட்பட 12 அங்கத்தவர்களால் 2015 செப்டம்பர் 25 திகதி வரை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையில் சேவையாற்றிய ஊழியர்களுக்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபைக்கு நிதியம் அனுப்புதல் குறிப்பிட்ட திகதியில் மேற்கொள்ளப்பட தவறியதால் விதிக்கப்பட்ட மிகைவிதிப்பு ரூபா 140,457 தொகையொன்று செலுத்த வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் போது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மிகைவிதிப்பு தொகையில் பகுதி ஒன்றாக ரூபா 8,684 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஊழியர்களில் 05 பேரிடம், சேவையை விட்டுச் சென்றுள்ள ஊழியர்கள் 02 பேரிடம் மற்றும் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ள 03 பேரிடம் 16 வருட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 147,526 இற்கான கடன் முற்பணத்தினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபையினால் 2010 ஆண்டிற்கு முன்னர் ரூபா 287,461 தொகை மற்றும் 2012 ஆண்டின் பின்னர் ரூபா 29,000 ஆக வழங்கியிருந்த போதிலும், ரூபா 316,461 இற்கான முற்பணத்தினை தீர்த்திருக்கவில்லை.

3.3 காலு எஸல அசிரிய நிகழ்ச்சித் திட்டம்

-----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132(ஓ) பிரிவின் பிரகாரம் பொதுவான முக்கியத்துவம் வாய்ந்த விடயம் ஒன்று தொடர்பான விழாச் செலவுகள் தொடர்பாக ஏதேனும் ஒரு வருடத்திற்கு மொத்தக் கூட்டுத்தொகை ரூபா ஒரு ஆயிரத்தை மிகைக்காத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் அதனை மிகைக்குமிடத்து அதற்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தை பெற வேண்டும். எனினும் அவ்வாறு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாமல் 2014 ஜூலை 11 முதல் 15 திகதி வரை சபையினால் நடாத்தப்பட்ட எஸல வலய செலவுக்காக ரூபா 686,018 தொகை ஒன்று கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(ii) எஸல வலயச் செலவிற்காக உதவி நிதியாக பணமாக ரூபா 357,330 தொகை மற்றும் பண்ட உதவியாக ரூபா 10,000 கிடைத்திருந்ததாக அறிக்கைகளில் குறிப்பிட்டிருந்த போதிலும், அப் பணத்தினை சபை நிதியத்திற்கு எடுத்து செலவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) எஸல வலயத்திற்காக 2014 ஆகஸ்ட் 26 ஆந் திகதி ரூபா 30,000 இற்கான தொகை ஒன்று மற்றும் 2014 ஜூலை 22 திகதி ரூபா 125,000 தொகையொன்று இரண்டு அரச நிறுவனங்களில் இருந்து கிடைத்திருந்த போதிலும் அப் பணத்தில் ரூபா 64,000 மாத்திரம் செலவீடு செய்து, மீதித் தொகையாகிய ரூபா 91,000 இனை பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

3.4 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

பயிற்சி செயலமர்விற்கான செலவுகள் மேற்கொள்ளல்

-----------------------------------------------------------------------------------------

சபையின் அனைத்து பதவியணிக்கும் பயிற்சி செயலமர்வு ஒன்று மற்றும் நல்லெண்ண சந்திப்பு ஒன்று நடத்துவதற்காக ஏற்பாட்டு விடயங்களுக்காக ரூபா 100,000 தொகையொன்று சபை அங்கீகாரம் இன்றி 2014 திசெம்பர் 26 ஆந் திகதி சபையில் செயலாளருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

(அ) 2007 பெப்ரவரி 28 திகதிய சீஎஸ்ஏ/பீ/1/40 கொண்ட ஜனாதிபதி செயலாளரின் அரச செலவுகள் முகாமைத்துவம் பற்றிய கடிதத்தின் பந்தி (iii) இன் பிரகாரம் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்கள், அவர்களின் கூட்டங்கள், கலந்துரையாடல்கள், செயலமர்வுகள் ஆகியவை நடத்துவதற்காக ஹோட்டல்களை தெரிவு செய்யக் கூடாது. அத்துடன் உள்நாட்டு சுற்றுலாக்களின் போது உணவு வகை மற்றும் தங்குமிடங்களுக்காக செலுத்த வேண்டிய ஹோட்டல் கட்டணம் அரசாங்க பணத்தினால் தீர்க்கப்படக் கூடாது என அறிவித்திருந்த போதிலும் அதற்கு முரணாக 2014 திசெம்பர் 27 திகதி தனியார் ஹோட்டல் ஒன்றில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பயிற்சிச் செயலமர்வு மற்றும் நல்லெண்ண சந்திப்பிற்காக ரூபா 90,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயலமர்வில் கலந்து கொண்ட எண்ணிக்கை பற்றிய சான்றுகள் ஏதும் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 106 இன் பிரகாரம் ஏதேனும் பணம் கிடைக்க வேண்டிய ஏதேனும் சாராருக்கு அக் கொடுப்பனவுக்காக உறுதிச் சான்றுகள்,

பட்டோலைகள் அல்லது உப உறுதிச் சான்றுடன் சமர்ப்பிக்க வேண்டும். எனினும், அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிப் பிரமாணங்கள் 264 இன் பிரகாரம் அனைத்து கொடுப்பனவுகளும் பணம் கிடைத்தற்கான பெறுவோரிடம் பெற்றுக்கொண்ட தேவையாயின் முறைப்படி முத்திரை ஒட்டப்பட்ட பற்றுச் சீட்டு ஒன்றினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனினும் தனிப்பட்ட ஹோட்டளுக்கு பணம் செலுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை.

3.5 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

------------------------------------------------------

2013 ஜுன் 05 திகதிய இலக்கம் : PCMD/PR/2013 கொண்ட ஜனாதிபதி செயலாளரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத அழிவடையும் நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித் தொகுதியும் 2013 செப்டம்பர் 05 திகதி அளவில் அகற்றுவதற்கான செயற்பாடு ஒன்றினை தயாரிக்கும் படி அறிவித்திருந்த போதிலும் சபையில் காணப்பட்ட ரூபா 1,000,000 இற்கு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த டபள் கப் வண்டி மற்றும் பெறுமதியினை இனங்காணக் கூடியதாக கை டிரக்டர், 2 டேலர்கள் மற்றும் தண்ணீர் பவுசர் ஒன்று சபை வளவில் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

------------------------------------------------

சபையினால் பயன்படுத்தப்படும் 04 வாகனங்களின் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2015 செப்டம்பர் 25 திகதி வரை அவ் வாகனங்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை.

1993 பெப்ரவரி 28 திகதி காலி பிரதான செயலாளர் அலுவலகத்தில் இருந்து கிடைத்திருந்த கப் வண்டி ஒன்றின் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் சபையிடம் காணப்படவில்லை. அதே போல் 2010 ஆண்டு முதல் அனுமதிப்பத்திரம் மற்றும் வாகன காப்புறுதி சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் சபையினால் வாகனம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

------------------------------------------------

(i) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் 2014 நவம்பர் மாத்தில் 1¼” கல்வணய்ஸ் குழாய்கள் (GI PIPE) 616 சபைக்கு வழங்கியிருந்ததுடன், அவற்றை பொருட் பதிவேட்டில் பதிவு செய்திருக்கவில்லை.

(ii) சபையில் 572 கல்வணய்ஸ் குழாய்கள் மாத்திரம் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டமையால் சபைக்கு வழங்கியிருந்த 44 குழாய்களின் பற்றாக்குறை ஒன்று காணப்பட்டது. அவற்றின் பெறுமதி ரூபா 48,708 ஆகும்.

3.8 செயற்திட்டங்களை தாமதம் செய்தல்

------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 03 செயற்திட்டங்கள் அமுல் நடத்துவதற்காக 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது தென் மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிடைத்திருந்த ரூபா 735,000 தொகையினை குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக பயன்படுத்தாமல், கணக்காய்வுத் திகதியாகிய 2015 செப்டம்பர் 25 திகதி வரை வங்கிக் கணக்கில் பயன்படுத்தப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

----------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்பதறு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.2 பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை 14 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. அவ் ஐய வினாக்களில் கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 12,847,108 ஆகும்.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்